**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை

Under Section 173 BNSS" ~~(Under Section 154 Cr.P.C)~~
~~(குற்றவியல் நடைமுறை சட்டம் 154 இன் கீழ்)~~

Vijayalakshmi 24/10/24

C 8101999

1. District மாவட்டம் : Ranipet  PS: காவல்நிலையம் VEAC  Year: ஆண்டு 2024  FIR No.: மு.த.அ. எண் 5/2024  Date: நாள் 24/10/24

2. (i) Act சட்டம்: Prevention of Corruption  Sections பிரிவுகள்: Sec 7
(ii) Act சட்டம்: Act 1988 as amended  Sections பிரிவுகள்: 186 BNSS
(iii) Act சட்டம்: by PC (Amendment) Act 2018 BNSS  Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from : நாள் முதல் 23/10/24  Date to : நாள் வரை —
Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல்  Time to : நேரம் வரை 15.40 hrs.
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 24/10/24  Time : நேரம் 12.00 hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் VOL-IV  Time : நேரம் 23/10/24 @ 13.30 hrs. 24/10/24 @ 12.00 hrs.

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக  Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்  North East 60 kms
Beat Number : முறைக் காவல் எண் —  (b) Address : முகவரி . Arakkonam Sub Registry Gandhi Road Arakkonam, Ranipet District
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : —  District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் C. Murugan  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Chinnasamy
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 5.4.68  (d) Nationality : நாட்டினம் Indian  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : வழங்கப்பட்ட நாள் —  Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Dy. Inspection Cell Officer  (g) Address : முகவரி District Inspection Cell Office, Collectorate Campus, Vellore

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. D. Dinesh Babu (34/24) s/o Deenadayalan Assistant i/c Sub Registrar, Arakkonam Sub-Registrar, Ranipet District

8. Reasons for delay in reporting by the complainant / Informant
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

No Delay

* GCP-240-34(Type-2) 90.000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

Seperate sheet attached.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 24/10/24

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

S. Vijayalakshmi 24/10/24

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
24/10/24 at 15.30 hrs

Name: பெயர் ....S.VIJAYALAKSHMI
Rank: நிலை.........................No. எண் ..........
INSPECTOR OF POLICE
VGAC, RANIPET

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:</u> இன்று 24.10.2024 ஆம் தேதியன்று பகல் சுமார் 12.00 மணியளவில் இராணிப்பேட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் காவல் ஆய்வாளர் S.விஜயலட்சுமி ஆகிய நான் ஆஜரில் இருந்தபோது, திரு.C.முருகன், துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் (இருப்பு), வேலூர்-9. அவர்கள் அலுவகத்தில் ஆஜராகி கொடுத்த புகார் மனுவின் விவரம் பின்வருமாறு, இராணிப்பேட்டை 24.10.2024 அனுப்புநர் C.முருகன், துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் (இருப்பு), வேலூர்-9. பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, இராணிப்பேட்டை. அம்மா, பொருள்: இருதுறை திடீர் கூட்டு சோதனை – அரக்கோணம் சார்பதிவாளர் அலுவலகம் - இருதுறை திடீர் கூட்டு சோதனை – நடவடிக்கை எடுத்தல் வேண்டி – மனு. பார்வை: அரக்கோணம் சார் பதிவாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை திடீர் சோதனை செயல்முறை, நாள்:23.10.2024. நேற்று 23.10.2024 ஆம் தேதி பகல் சுமார் 12.30 மணிக்கு, இராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் காந்தி ரோடில் உள்ள பதிவுத்துறை சார்பதிவாளர் அலுவலகத்தின் தரைத்தளத்தில் உள்ள சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரப்பதிவுகளுக்காகவும், இன்ன பிற பதிவுகளுக்காகவும் வரும் பொது மக்களிடம் அவர்களுக்கு செய்ய வேண்டிய பதிவுப்பணிகளுக்காக அரக்கோணம் சார் பதிவாளர் மற்றும் சார் பதிவாளர் அலுவலக ஊழியர்கள் பதிவு செய்யப்படும் பத்திரப்பதிவின் மதிப்பிற்கேற்றவாறு தனித்தனியாகவும், அலுவலர்கள் தாங்கள் செய்து முடிக்க வேண்டிய பணிகளுக்காக நேரடியாகவும், டாக்குமெண்ட் ரைட்டர்கள் மற்றும் புரோக்கர்கள் மூலமாக கையூட்டு பெறுவதாகவும், பத்திர விற்பனையாளர்கள், டாக்குமெண்ட் ரைட்டர்கள் மற்றும் புரோக்கர்கள் அரக்கோணம் சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆதிக்கம் செலுத்துவதாக எனக்கு கிடைத்த நம்பகமான தகவலை, நான் எனது தகவலர்கள் மூலம் ஊர்ஜிதம் செய்து கொண்டு, இராணிப்பேட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் ஆகிய தங்களுக்கு சுமார் 13.30 மணிக்கு தகவல் தெரிவித்து, என்னுடைய தலைமையில் மற்றும் இராணிப்பேட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு குழுவினர் ஆகியோர்களுடன் மதியம் சுமார் 14.00 மணிக்கு அலுவலகத்தில் இருந்து புறப்பட்டு, அரக்கோணம் சார் பதிவாளர் அலுவலகத்தில் இரு துறை திடீர் சோதனை மேற்கொள்ள மாலை சுமார் 15.30 மணிக்கு சென்று சேரப்பட்டது. அரக்கோணம் சார்பதிவாளர் அலுவலகத்தின் தரைத்தளத்தில் உள்ள அலுவலகத்தை குழுவினருடன் கண்காணித்துக்கொண்டிருந்தபோது, அப்போது, சார் பதிவாளர் அலுவலகத்திற்குள்ளாகவும், அலுவலக வளாகத்திற்குள்ளேயும் நிறைய பொது மக்கள் இருந்தனர். மேலும், சில நபர்கள் அலுவலகத்திற்குள்ளே செல்வதும், வெளியே வந்து

பொது மக்களிடம் பேசிவிட்டு மீண்டும் அலுவலகத்திற்குள்ளே செல்வதுமாக இருந்தனர். மேற்படி சார் பதிவாளர் அலுவலகத்தை தொடர்ந்து கண்காணித்துக்கொண்டிருந்தோம்.

2) பின்னர், மாலை சுமார் 15.40 மணிக்கு, இரு துறை திடீர் சோதனைக்குழுவினர் அரக்கோணம் சார் பதிவாளர் அலுவலகத்திற்குள் சென்று, சார் பதிவாளர் இருக்கையில் உட்கார்ந்திருந்த சார் பதிவாளர் அவர்களிடமும், அங்கிருந்த அலுவலர்களிடமும் நான் என்னையும் குழுவினரையும் அறிமுகப்படுத்திக்கொண்டு, துறை அடையாள அட்டையை காண்பித்தும் வந்த நோக்கத்தை தெரிவித்தும், நாங்கள் எங்களை சுயபரிசோதனைக்கு உட்படுத்தி கொண்டு எங்களிடம் எந்த பணமும் இல்லை என்று அலுவலக ஊழியர்களுக்கு உறுதி செய்து காண்பிக்கப்பட்டது.

3) பின்னர், சார் பதிவாளரை விசாரிக்க, அவர் தன்னுடைய பெயர் தினேஷ் பாபு, என்றும், தந்தையார் பெயர் தீனதயாளன் என்றும், தான் இளநிலை உதவியாளராக அரக்கோணம் சார் பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரிந்து, உதவியாளராக பதவி உயர்வில் கடந்த 26.06.2024 ஆம் தேதியன்று சோளிங்கர் சார் பதிவாளர் அலுவலகத்தில் பணிக்கு அறிக்கை செய்தும், மீண்டும் பகராண்மையில் கடந்த 27.04.2022 ஆம் தேதி முதல் அரக்கோணம் சார் பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரிந்து வருவதாகவும், தற்போது அரக்கோணம் சார் பதிவாளர் அலுவலகத்தின் சார் பதிவாளர் பொறுப்பை திரு.தாமோதரன், உதவியாளர் கவனித்து வந்ததாகவும், திரு.தாமோதரன் அவர்கள் நேற்று 23.10.2024 ஆம் தேதி அவரது சகோதரர் இறந்துவிட்டதால் தற்செயல் விடுப்பில் சென்றதால், இராணிப்பேட்டை மாவட்ட பதிவாளர் அவர்களின் வாய்மொழி உத்திரவின் பேரில், நேற்று 23.10.2024 ஆம் தேதியன்று தான் சார் பதிவாளர் பொறுப்பை கவனித்து வருவதாக சொன்னார்.

4) பின்னர், திரு.தினேஷ் பாபு, பொறுப்பு: சார்பதிவாளர் அவர்களை சோதனை செய்ய, அவர் வலது பின்புற பேன்ட் பாக்கெட்டில் மணி பர்ஸ் இருந்தது. அதை எடுத்து பார்க்க, அதில் பணம் இருந்தது. அந்த பணத்தை எடுத்து எண்ணிப் பார்க்க, அதில் ரூ.670/- இருந்தது. அவரிடம் சார் பதிவாளர் தனி நபர் பண இருப்பு பதிவேட்டில் இன்று அலுவலகத்திற்குள்ளே வந்தபோது பதிவு செய்துள்ளீர்களா என கேட்க, அவர் தனி நபர் கையிருப்பு பதிவேட்டில் பதிவு செய்திருப்பதாக கூறி, தனி நபர் பண இருப்பு பதிவேட்டை ஆஜர் செய்தார். அதை பார்வையிட, அதில் குறிப்பிட்டிருந்த தொகையைவிட குறைவாகவே இருந்தது. அந்த பதிவேடு கைப்பற்றப்பட்டது.

5) பின்னர், சார்பதிவாளர் அலுவலக ஹாலில் பதிவிற்காக வந்திருந்த பொது மக்களையும், காத்திருப்போர் அறையில் உட்கார்ந்திருந்த நபர்களையும், விசாரித்தும், அவர்களை திரேக சோதனை செய்தும், பணம் ஏதும் இல்லாதவர்களை விசாரித்து அனுப்பப்பட்டனர். பணம் வைத்திருந்த 1) திரு.K.செந்தில்குமார், பிராமணர் தெரு, அவலூர், நெமிலி தாலுக்கா, இராணிப்பேட்டை மாவட்டம் என்பவர் தான் வைத்திருந்த பணம் ரூ.16,500/-ம், 2) திரு.P.நக்கேஷ் சுனில்நாத், நெ.25, சோமசுந்தரம் நகர் 2வது தெரு, பழனிபேட்டை, அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம் என்பவர்

தான் வைத்திருந்த ரூ.17,500/-ம், 3) திரு.டிசௌசா ஜான், நெ.1, இந்திரா நகர், கோவில்பதகை, ஆவடி, சென்னை என்பவர் தான் வைத்திருந்த பணம் ரூ.4,10,000/-ம், 4) திரு.சீனிவாசலு, டேங்க் தெரு, ஆதமங்களம், திருவண்ணாமலை மாவட்டம் என்பவர் தான் வைத்திருந்த பணம் ரூ.10,000/-ம், 5) திரு.தயாளன், பெருங்களத்தூர் கிராமம், அரக்கோணம் தாலுக்கா, இராணிப்பேட்டை மாவட்டம் என்பவர் தான் வைத்திருந்த பணம் ரூ.7,500/-ம், 6) திரு.பூபாலன், நெ.9, பழண்டியம்மன் கோயில் தெரு, தக்கோலம், இராணிப்பேட்டை மாவட்டம் என்பவர் தான் வைத்திருந்த பணம் ரூ.30,800/-ம், 7) திருமதி.பிரேமா, நெ.34/5, ஜராஜங்கம் மத்திய தெரு, வடபழனி, சென்னை-26 என்பவர் தான் வைத்திருந்த பணம் ரூ.9,000/-ம், 8) திரு.சரவணன், நெ.7/17, காமாட்சியம்மன் காலனி, வடபழனி, சென்னை-26 என்பவர் தான் வைத்திருந்த பணம் ரூ.13,000/-ம், 9) திரு.வினோத்குமார், நெ.249, போலாட்சியம்மன் கோயில் தெரு, தணிகைபோளூர், அரக்கோணம் தாலுக்கா, இராணிப்பேட்டை மாவட்டம் என்பவர் தான் வைத்திருந்த பணம் ரூ.10,000/-ம், 10) திரு.சுரேஷ், நெ.51/A, கசத்துமேட்டு தெரு, ஆலப்பாக்கம், ஆட்டுபாக்கம், இராணிப் பேட்டை மாவட்டம் என்பவர் தான் வைத்திருந்த பணம் ரூ.10,800/-ம் தக்க முகாந்திரம் கூறியதால், அவரவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது.

6) மேலும், அந்த அலுவலகத்தில் இருந்த திரு.மகாலிங்கம், நெ.22, TMM கோயில் தெரு, தக்கோலம், அரக்கோணம் தாலுக்கா, இராணிப்பேட்டை மாவட்டம் என்பவரை சோதனை செய்ய அவர் தன்னுடைய அண்டர்வேரில் இரண்டு கவர்களில் தனித்தனியாக பணம் வைத்திருந்தார். அவரை விசாரிக்க, தான் பூபாலன் என்பவருடன் சாட்சி கையெழுத்து போட வந்ததாக சொன்னார். அவர் வைத்திருந்த கவர்களில் ஒரு கவரை பார்க்க, பணம் ரூ.25,000/- இருந்தது. அதை பற்றி கேட்க, அது தான் வண்டி ஓட்டியும், சிறு சிறு வேலைகள் செய்தும் சேர்த்து வைத்த பணம் என்று தக்க முகாந்திரம் கூறியதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும், அவர் மற்றொரு கவரில் வைத்திருந்த பணம் ரூ.12,000/-ஐ பற்றி கேட்க, அதற்கு தக்க முகாந்திரம் அவர் கூறாததால், அந்த பணம் சார் பதிவாளருக்கு லஞ்சமாக கொடுப்பதற்காக எடுத்து வந்த பணமாக இருக்கலாம் எனக்கருதி கைப்பற்றப்பட்டது. திரு.முரளி, நெ.29C, வானவராயன் நகர், முத்தாகரம் கொளத்தூர், சென்னை (இடைத்தரகர்) என்பவர் தான் வைத்திருந்த பணம் ரூ.20,000/-ற்கு தக்க முகாந்திரம் கூறாததால், அந்த பணம் தக்க முகாந்திரம் கூறாத பணமாக கைப்பற்றப்பட்டது. திரு.முருகேசன், நெ.15, கீழாண்டை தெரு, செம்பேடு, அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம் (இடைத்தரகர்) என்பவர் தான் வைத்திருந்த பணம் ரூ.6,700/-ற்கு தக்க முகாந்திரம் கூறாததால், அந்த பணம் தக்க முகாந்திரம் கூற இயலாத பணமாக கைப்பற்றப்பட்டது. திரு.கோபாலகிருஷ்ணன், நெ.17/10A, குருசாமி தெரு, பழனிபேட்டை, அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம் (ஜெராக்ஸ் கடை – இடைத்தரகர்) என்பவர் தான் வைத்திருந்த பணம் ரூ.13,000/-ற்கு தக்க முகாந்திரம் கூறாததால், அந்த பணம் தக்க முகாந்திரம் கூறாத பணமாக கைப்பற்றப்பட்டது.

7) மேலும், அரக்கோணம் சார் பதிவாளர் அலுவலக பின் வரும் அலுவலர்களை சோதனை செய்ய, அவர்கள் வைத்திருந்த பணத்திற்கு தக்க முகாந்திரம் கூறியதால், அவர்களிடமிருந்து பணம் ஏதும் கைப்பற்றப்படவில்லை. பின்னர், சார் பதிவாளர் ஹாலின் வடக்கு திசையில் உள்ள இரண்டு அறைகளில், நுழைவாயிலுக்கு அருகில் உள்ள அறையை சோதனை செய்ய, அந்த அறையில் பணம் ஏதும் இல்லை. அதற்கு அடுத்துள்ள அறையை சோதனை செய்ய, அது பதிவறை ஆகும். அந்த பதிவறைக்கு அருகில் சிறிய அறை ஒன்று இருந்தது. அந்த அறையில் ஒரு பக்கத்தில் இருந்த மேஜை மீதிருந்த பதிவேட்டை சோதனை செய்ய, அதில் பணம் இருந்தது. அந்த பணம் குறித்து திரு.தினேஷ் பாபு, பொறுப்பு சார் பதிவாளர், அலுவலக ஊழியர்கள் மற்றும் பொது மக்களிடம் விசாரிக்க, யாரும் அந்த பணத்திற்கு உரிமை கோரவில்லை. அந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்க்க, அதில் பணம் ரூ.2,910/- இருந்தது. எனவே அந்த உரிமை கோராத பணம் ரூ.2,910/- கைப்பற்றப்பட்டது.

8) அந்த சார் பதிவாளர் உட்கார்ந்திருந்த ஹாலின் தெற்கு பகுதியானது கண்ணாடி தடுப்புகளால் ஆன கணினி அறையை சோதனை செய்ய, தெற்கு திசை சுவற்றை ஒட்டியவாறு இருந்த கணினி இருக்கையில் ஒரு நபர் உட்கார்ந்திருந்தார். அவரை விசாரிக்க, அவர் தன்னுடைய பெயர் S.குமரன் என்றும், தந்தையார் பெயர் சுந்தரபாண்டியன் என்றும், தன்னுடைய குடும்பம் எண்.7A, அண்ணாநகர், சிப்காட், இராணிப்பேட்டை என்ற முகவரியில் வசித்து வருவதாகவும், தான் அரக்கோணம் சார் பதிவாளர் அலுவலகத்தில் பைண்டிங் வேலை செய்வதற்காக தினமும் வருவதாகவும், அதற்காக இங்கு வரும் பொது மக்களிடம் இருந்து பணம் பெற்றுக்கொள்வதாக சொன்னார். அவரை சோதனை செய்ய, அவருடைய பணம் ரூ.70/- இருந்தது. அந்த பணம் அவருடைய செலவிற்காக வைத்திருக்கும் பணம் என்று சொன்னதால், அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது.

9) பின்னர், அந்த ஹாலின் தென் கிழக்கு மூலையில், திருமதி.மலர், அலுவலக உதவியாளர் இருக்கைக்கு அருகில் இருந்த அறையை சோதனை செய்ய, அந்த அறையில் ஒரு பதிவறையும், கழிவறையும், ஒரு சிறிய ஹாலும் இருந்தன. அந்த ஹாலில் ஒரு நபர் உட்கார்ந்து கொண்டு அலுவலக ஆவணங்களை பார்த்துக்கொண்டிருந்தார். அவரை விசாரிக்க, அவர் தனது பெயர் G.வெங்கடேசன், தனது தந்தையார் பெயர் கோபி என்றும், தான் எண்.5, போல் தெரு, பழனிப்பேட்டை, அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம என்ற முகவரியில் வசித்து வருவதாகவும், தான் அரக்கோணம் சார் பதிவாளர் அலுவலகத்தில் பைண்டிங் வேலை செய்வதற்காக வாரத்தில் மூன்று முறை அரக்கோணம் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு கடந்த இரண்டு வருட காலமாக வருவதாகவும், அதற்காக தனக்கு சார் பதிவாளர் ரூ.200/- தருவதாக சொன்னார். அவரை சோதனை செய்ய, அவருடைய பணம் ரூ.120/- இருந்தது. அந்த பணம் அவருடைய செலவிற்காக வைத்திருக்கும் பணம் என்று சொன்னதால், அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது.

10) பின்னர், அந்த பதிவறையை சோதனை செய்ய, அங்கு பதிவறையும், கழிவறையும், ஒரு சிறிய வராண்டாவும் இருந்தன. மேலும், பதிவறையை ஒட்டி சிறிய கிடங்கு ஒன்றும் இருந்தன. அந்த சிறிய கிடங்கில் பழைய கணினி உபகரணங்களுக்கு அடியில் பணம் இருந்தது. அந்த பணம் குறித்து திரு.தினேஷ் பாபு, பொறுப்பு சார் பதிவாளர், அலுவலக ஊழியர்கள் மற்றும் மக்களிடம் விசாரிக்க, யாரும் அந்த பணத்திற்கு உரிமை கோரவில்லை. அந்த பணத்தை எடுத்து எண்ணிப் பார்க்க, அதில் பணம் ரூ.5,600/- இருந்தது. எனவே அந்த உரிமை கோராத பணம் ரூ.5,600/- கைப்பற்றப்பட்டது. பின்னர், Waiting Hall மற்றும் அதன் அருகில் EB Room சோதனை செய்ய, EB Room -ல் பணம் இருந்தது. அந்த பணம் குறித்து, சார்பதிவாளர் (பொ) மற்றும் அங்கிருந்த மக்களிடம் விசாரிக்க, யாரும் உரிமை கோரவில்லை. அந்த பணத்தை எடுத்து, எண்ணிப்பார்க்க அதில் பணம் ரூ.15,000/- இருந்தது. அந்த பணம் யாரும் உரிமை கோராததால் கைப்பற்றப்பட்டது.

11) பின்னர், திரு.தினேஷ் பாபு அவர்களுடன் சார் பதிவாளர் அலுவலகத்தை சுற்றி சோதனை செய்து வந்தபோது கட்டிடத்தின் கிழக்கு திசையில் உள்ள பொது கழிவறையின் பின்பக்கம் கட்டிடத்தை ஒட்டியவாறு ஒரு கருப்பு பிளாஸ்டிக் கவர் இருந்தது. அதனை சோதனை செய்ய, அந்த கவரின் உள்ளே பார்க்க பணம் இருந்தது. அந்த பணம் குறித்து திரு.தினேஷ் பாபு மற்றும் பொதுமக்களை விசாரிக்க, யாரும் அந்த பணத்திற்கு யாரும் உரிமை கோரவில்லை. அந்த பணத்தை எடுத்து எண்ணிப் பார்க்க, அதில் ரூ.30,000/- இருந்தது. எனவே, அந்த பணம் யாரும் உரிமை கோராத பணமாக கைப்பற்றப்பட்டது.

12) பின்னர், சார் பதிவாளர் அலுவலகத்திலிருந்து, சார் பதிவாளர் அலுவலக ஊழியர்கள் வருகைப்பதிவேடு, தனி நபர் பணம் கையிருப்பு பதிவேடு, DATA ENTRY OPERATOR AND CAMERA OPERATOR ATTENDANCE REGISTER, ஆன்லைனில் பதிவிறக்கம் செய்த அ-கணக்கு, "D" கணக்கு மற்றும் H-கணக்கு ஆகியவை கைப்பற்றப்பட்டது. அவற்றில் முதல் மற்றும் பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட இறுதி பக்கங்களில் நானும், காவல் ஆய்வாளர் ஆகிய தாங்களும் மற்றும் திரு.தினேஷ் பாபு, பொறுப்பு: சார்பதிவாளர் ஆகியோர் கையொப்பம் செய்தோம்.

13) இந்த இருதுறை திடீர் சோதனையில், கைப்பற்றப்பட்ட உரிமை கோராத பணம் ரூ.53,510/- மற்றும் தக்க முகாந்திரம் கூற இயலாத பணம் ரூ.51,700/-, ஆக மொத்தம் ரூ.1,05,210/- ஆனது திரு.தினேஷ் பாபு, உதவியாளர், பொறுப்பு: சார்பதிவாளர் அவர்களுக்கும், சார் பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கு இலஞ்சமாக கொடுப்பதற்காக வைத்திருந்த பணமாக இருக்கக்கூடும் என கருதி இருதுறை திடீர் கூட்டுச்சோதனையில் கைப்பற்றப்பட்டது.

14) மேற்படி இருதுறை திடீர் கூட்டு சோதனையானது, 23.10.2024 ஆம் தேதி இரவு 23.00 மணிக்கு முடிக்கப்பட்டது. நிகழ்வுகள் அனைத்தும் இருதுறை திடீர் கூட்டுசோதனை செயல்முறை தயார் செய்து, நானும், தாங்களும் மற்றும் திரு.தினேஷ்

பாபு, உதவியாளர், பொறுப்பு: சார் பதிவாளர், சார் பதிவாளர் அலுவலகம், அரக்கோணம் ஆகியோரும் கையொப்பம் செய்தோம். அதன் நகல் திரு.தினேஷ் பாபு, உதவியாளர், பொறுப்பு: சார் பதிவாளர் என்பவருக்கு வழங்கி, ஒப்புதல் பெறப்பட்டது. எனவே, தனது பதவி அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து, ஆவண எழுத்தர்கள் மற்றும் இடைத்தரகர்கள் மூலம் பொது மக்களிடமிருந்து லஞ்சமாக பணத்தை கேட்டு பெற்ற திரு.D.தினேஷ் பாபு, உதவியாளர், பொறுப்பு: சார் பதிவாளர் என்பவர் மீது ஊழல் தடுப்பு சட்டப்படி நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். மேலும், இந்த திடீர் சோதனையின்போது கைப்பற்றப்பட்ட லஞ்சப்பணம் ரு.1,05,210/-, கைப்பற்றப்பட்ட பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் இருதுறை திடீர் கூட்டுசோதனையின்போது தயார் செய்யப்பட்ட அசல் செயல்முறை ஆகியவற்றை தங்களிடம் மேல் நடவடிக்கை எடுக்கும்பொருட்டு சமர்ப்பிக்கிறேன். ஓம்/xxxxx (சி.முருகன்), துணை ஆய்வுக் குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக் குழு அலுவலகம், வேலூர்-9.

Sir, Received the complaint on 24.10.2024 at 12.00 hrs and registered a case in Ranipet V&AC Cr.No.05/2024 u/s 7 of Prevention of Corruption (Amendment) Act, 2018 and 106 BNSS on 24.10.2024 at 12.30 hrs. Sd/- xxxxxxxx (S.Vijayalakshmi), 24.10.2024 Inspector of Police, V&AC., Ranipet, Ranipet District.

The FIR in original along with the complaint and its enclosure sent to the Hon'ble CJM and Special Judge, Ranipet and other copies to the Officers concerned.

S.Vijayalakshmi
24/10/24

Inspector of Police
Vigilance & Anti-Corruption
Ranipet.